# ஹரிஜன முன்னேற்றம்

C

GOVERNMENT OF MADRAS
1958

சென்னை அரசாங்க செய்தித்துறை வெளியீடு

4648

# முன்னுரை

சென்னை மாநிலத்தில் உள்ள ஹரிஜன மக்கள் கல்வி, சமுதாயம், மற்றும் பொருளாதா[illegible] துறைகளில் முன்னேற்றம் காண்பதற்காகச் சென்னை அரசாங்கம் செய்துள்ள பணிகள் பலவாகும். அவைகளைப் பற்றிச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இச்சிறு வெளியீட்டில் கூறப்பட்டுள்ளது.

நெறியாளர்,
சென்னை அரசாங்க செய்தித் துறை.

# ஹரிஜன முன்னேற்றம்

" காக்கைக் குருவி எங்கள் ஜாதி " என்பது மகாகவி பாரதியின் மணி மொழி. இமயம் முதல் குமரி வரை வாழ்பவர்கள் எல்லோரும் ஓர் இனம். எல்லோரும் ஓர் குலம். எல்லோரும் இந்நாட்டு மன்னர். இங்கே உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாடும், ஜாதி சமய வித்தியாசங்களும் இருக்கக்கூடாது என்பது அரசினரின் நோக்கம். காரணம் ஜாதிமத வேறுபாடுகளால் பல இனங்கள் கல்வி, சமுதாயம், மற்றும் பொருளாதாரத் துறைகளில் முன்னேற முடியாமல் மென்மேலும் தாழ்ந்த நிலைக்குச் செல்கின்றன. அந்த இனமக்களில் ஹரிஜனங்களும் உண்டு. " ஹரியின் மக்கள் " என்று அண்ணல் காந்தியடிகள் போற்றிய ஹரிஜனங்கள் எல்லா மக்களுடனும் சம அந்தஸ்த்து பெற்று வாழ வசதிகள் செய்வதில் அரசாங்கம் கண்ணுங் கருத்துமாய் இருக்கின்றது. கல்வி, தொழில், வேளாண்மை போன்ற எல்லாத் துறைகளிலும் அவர்களுக்குச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

**கல்வி.**—கல்வி சிறந்த தமிழ் நாட்டில் கல்லாமை என்னும் மடமை இல்லாமை வேண்டும். ஹரிஜனங்களுக்கு கல்விக்கான வசதி அளிப்பதென்பது அரசாங்கத்தின் ஆதிமுதல் நோக்கமாகும். 1957–58-ம் ஆண்டில் நமது மாநிலத்தில் அரசாங்கத்தினரால் நடத்தப்படும் ஹரிஜன நலப்பள்ளிகள் 832. இவைகளில் 71,712 மாணவ மாணவிகள் கல்வி பயின்




"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"
தென் ஆற்காடு மாவட்டத்தில்

திருக்கிருர்கள். இப்பள்ளிகளில் படிக்கும் ஏழை மாணவர் களுக்கு இலவச நண்பகல் உணவு அளிக்கப் பட்டு வருகிறது. தானே மாணவர்கள் தங்கும் விடுதிகளை நடத்துவதும், தனிப் பட்டவர்கள் நடத்தும் விடுதிகளுக்கு உதவி அளித்து வருவதும் அரசாங்கத்தின் தலையாய பணியாகும். இம்மாதிரி மானியம் பெறும் மாணவர் விடுதிகள் 185. அரசாங்க மாணவ விடுதி கள் 88-ம் (இதில் 26 மாணவியர்க்கான விடுதிகள்) நமது மாநிலத்தில் உள்ளன. இங்கே ஹரிஜன, பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் இலவசமாகத் தங்கவும், உணவு பெற வும் உரிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தீண்டாமையை ஒழிப்பதற்காக விடுதிகளில் எல்லா வகுப்பு மாணவர்களும் ஒன்ருக இணைந்திருக்க அரசாங்கம் திட்டம் வகுத்துள்ளது. அரசாங்க விடுதிகளில் உள்ள மொத்த இடங்களில் ஒதுக்கப் பட்ட வகுப்பினருக்கு 75 சதவிகித இடங்களும், பின் தங்கிய வகுப்பினருக்கும் முற்பட்ட வகுப்பினருக்கும் முறையே 15

சதவிகிதம், 10 சதவிகிதம் இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. பலவகைப்பட்ட கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு விடுதிகளில் தங்கிப்படிக்கவும், வெளியிலிருந்து படிக்கவும் உபகாரச் சம்பளம் அளிக்கப்படுகிறது. இந்திய அரசாங்கம் 1956-57-ம் ஆண்டிலிருந்து கல்லூரிகளில் பயிலும் ஹரிஜன மாணவர்களுக்கு உபகாரச்சம்பளம் அளித்து வருகிறது. ஹரிஜன நலத்துறை நெறியாளர் ஹரிஜன மாணவர்களுக்கு ஆண்டு ஆரம்பத்தில் முன்பணமாக ரூ. 200 கொடுத்துதவவும், பின்னர் உபகாரச் சம்பளத்திலிருந்து அவற்றை எடுத்துக்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது. அரசாங்கக் கல்வி நிலையங்களில் உள்ள இடங்களில் ஒதுக்கப்பட்ட பழங்குடி மாணவர்களுக்கு 16 சதவிகித இடமும், பின்தங்கிய வகுப்பினர் மாணவர்களுக்கு 25 சதவிகித

**"கல்வி கரையில : கற்பவர்களும் கணக்கிலர்"**
சென்னையிலுள்ள எம். சி. ராஜா மாணவர் விடுதி



இடமும் ஒதுக்கப்படுகிறது. அரசாங்க மான்யம் பெறும் கல்வி நிலையங்களிலும் இம்முறை மேற்கொள்ளப்படுகிறது. 1956–57-ம் ஆண்டு முதற்கொண்டு சென்னை விமான கிளப், டேராடூனில் உள்ள சைனிக்திட்டம் ஆகியவைகளில் பயிற்சி பெறும் ஹரிஜன மாணவர்களுக்கு விசேஷ உபகாரச் சம்பளம் வழங்கப்படும். பி.டி.எஸ். படிப்புக்கும் (பல் வைத்தியப் பயிற்சி), எம்.ஓ.எல். படிப்புக்கும் உபகாரச் சம்பளம் வழங்கப்படும். குரோம்பேட்டையில் உள்ள மதராஸ் டெக்னாலஜி இன்ஸ்டிட்யூட்டில் படிக்கும் மாணவர்களுக்கும் உபகாரச் சம்பளம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஹரிஜன மாணவர்களில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் அதிக மார்க்குகள் பெறுபவர்களுக்கு அரசாங்கம் ரூ. 50, ரூ. 10 மதிப்புள்ள தங்க, வெள்ளிப் பதக்கங்கள் வழங்கும். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ரூ. 120 செலவிடப்படும். இதில் ஒவ்வொன்றும் ரூ. 50 மதிப்புள்ள இரு தங்கப் பதக்கங்கள் ஒரு ஹரிஜன மாணவனுக்கும், மாணவிக்கும் முதல் பரிசாகவும், ஒவ்வொன்றும் ரூ. 10 மதிப்புள்ள இரு வெள்ளிப்பதக்கங்கள் ஒரு ஹரிஜன மாணவனுக்கும், மாணவிக்கும் இரண்டாவது பரிசாகவும் கொடுக்கப்படும்.

1957–58-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட வகுப்பினர் கல்வி வசதிக்காக ரூ. 91,67,600 ஒதுக்கப்பட்டது. 1958–59-ல் ரூ. 1,01,95,900-ம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி ஹரிஜனங்களின் கைகளுக்கு எட்டாத கனியாக இருந்த நிலை மாறி வருகிறது. அரசாங்கம் கையாண்டு வரும் முறைகள்தாம் இதற்குக் காரணம் என்று சொன்னால் இதில் எள்ளத்தனையும் தவறில்லை.


**வீட்டு வசதி.**—காற்றடித்தால் பறந்துவிடும் கூரையும் மழை பெய்தால் கரைந்துவிடும் மண்சுவரும்தான் இன்றும் பல ஹரிஜனங்களுக்குப் பாதுகாப்பளித்து வருகின்றன. இந்த


நிலையை மாற்ற ஹரிஜனங்களுக்கு 1949-லிருந்து இலவசமாக மனைக்கட்டுகள் வழங்கவும், வீடு கட்டிக்கொடுக்கவும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் நன்செய் நிலமாய் இருந்தால் 3 செண்ட்டும், புன்செய் நிலமாயிருந்தால் 5 செண்ட்டும் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் 1956 ஜூலை வரை கிராமப்புறங்களிலும், பின்னர் முதல் வகுப்புப் பஞ்சாயத்துப் பிரதேசங்களிலும், நகர்ப் புறங்களிலும் விஸ்தரிக்கப்பட்டது.

1956–57-ம் ஆண்டு முடிவு வரையில் அரசாங்கத்திற்குச் சொந்தமானதும், தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமானதுமான நிலங்களிலிருந்து சுமார் 1,50,000 மனைக்கட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ. 58 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 1957–58-ம் ஆண்டில் மனைக்கட்டுக்கான நிலம் வாங்க ரூ. 4,40,100 ஒதுக்கப்பட்டுள்ளது.

**குடிசைக்கு பதில் வீடுகளின் வரிசை**

கோயம்புத்தூர் மாவட்டத்தில்





" இணற்று நீரும் "

கல்லுப்பட்டியில்

" இராமத்தின் சீறும் ".



1956–57-ம் ஆண்டில் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டித்தர அரசாங்கம் திட்டம் வகுத்த பின்னர், இரண்டாவது ஐந் தாண்டு திட்டத்தில் மாநில, மத்திய அரசாங்க திட்டங்களின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் சுமார் ரூ. 18 லட்சம் ஒதுக்கப்பட் டுள்ளது. 1956–57-ல் 3,024 வீடுகள் கட்ட சுமார் ரூ. 16 லட்சம் செலவாயிற்று. 1957–58ல் 3,000 வீடுகள் கட்ட ரூ. 18 லட்சம் அனுமதிக்கப்பட்டது.

ஒவ்வொரு வீட்டின் மதிப்பு ரூ. 750. வீடுகட்டும் சாமான் கள் வாங்க ரூ. 550, இலவசமாக ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படும். மீதியை அவர்கள் கொடுக்கவேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்ட குழப்பங்களின் காரணமாக வீடிழந்த ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டித்தர ரூ. 16,33,150-ம், மறவர்களுக்கு ரூ. 58,850-ம் செலவிடப் படும். வீடில்லாத பாமரர்களாக ஹரிஜனங்கள் இருக்கும் வேதனையான நிலை கொஞ்சம் கொஞ்சமாக மாறிவருகிறது. சில ஆண்டுகளில் அந்தக் குறையும் இல்லாமல் மறைந்து விடும்.

**விவசாயம்.**—இந்தியா ஒரு விவசாய நாடு. உழவுக்கு வந்தனை செய்யும் பூமி. திரும்பும் திசையெல்லாம் கதிர் சாயும் நெல் வயல்கள். கரும்புத்தோட்டங்கள்—கண்கவரும் பசுங்கழனி. இவைகள் இல்லையெனில் இந்தியாவே இல்லை. விவசாயத்தை நம்பி வாழும் ஹரிஜனங்களுக்கு வேளாண் மைக்கு வேண்டிய சாதனங்களை அரசாங்கம் வழங்கி வருகிறது.

தனது சொந்த நிலத்திலோ அல்லது குத்தகை நிலத் திலோ வேளாண்மை செய்யும் ஒவ்வொரு ஹரிஜன விவ சாயிக்கும் உழவு மாடுகள், விவசாயக் கருவிகள், விதைகள் வாங்க ரூ. 285 கொடுக்கப்படுகிறது. பாசனக் கிணறுகள் தோண்ட பல உதவியும் உண்டு. இவை யெல்லாவற்றுக்கு மாக 1957–58-ம் ஆண்டில் அளிக்கப்பட்ட மான்யம் ரூ. 17·32 லட்சம். 1958–59-ல் ரூ. 17·10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



" உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை "

ஹரிஜன நலத் துறையினரால் அளிக்கப்படும் உழவு மாடுகள்.

ஊழல்களை நீக்குவதற்காக உழவு மாடுகளை அந்தந்த மாவட்ட நல அதிகாரிகளே விலைக்கு வாங்கி " ஹரிஜன நலம் " (H. W.) என்ற குறியீடுகளை மாடுகளின்மீது பொறித்து மனுதாரர்களுக்கு வழங்குகின்றனர்.

தரிசு நிலங்களை மலைஜாதியினருக்கும், ஒதுக்கப்பட்ட வகுப்பினருக்கு மட்டுமே தரவேண்டும் என்பது ரெவின்யூ போர்டின் கட்டளையாகும். இந்தக் கட்டளையின்படி 1952-53-லிருந்து 1957-58-வரை 32,350,523 எக்கர் நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**பொது சுகாதாரம்.**—நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வமாகும். அந்தச் செல்வம் நெடுங்காலம் ஹரிஜனங்களுக்குக் கிடைக்காமல் இருந்தது. ஹரிஜனங்கள் வாழும் பகுதிகளில் " சுகாதாரம் " என்பது பொருள் புரியாத சொல்லாக இருந்த காலமொன்றிருந்தது. ஆனால் தற்பொழுது ஹரிஜனங்கள் நோயற்ற வாழ்வு வாழ்ந்து குறைவற்ற செல்வம் காண வழிவகைகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஹரிஜன காலனிகளுக்கு நடைபாதை மற்றும் சுடுகாடு வசதிகளும் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. இரண்டாம் ஐந்தாண்டு திட்ட முடிவிற்குள் 20 குடும்பங்களுக்கு மேலுள்ள ஹரிஜன காலனிகளில் குடிதண்ணீர்க் கிணறு வசதி பெருத்த அளவில் செய்யப்படும். 1956–57-ல் ஹரிஜன காலனிகளில் சுகாதார வசதிகளுக்காக ரூ. 3,99,165 செலவிடப்பட்டது. 1957–58-ம் ஆண்டில் ரூ. 3,48,200 ஒதுக்கப்பட்டுள்ளது.

**குடிசைத் தொழில்கள்.**—செய்யத்தக்க தொழில்கள் ஆயிரமாயிரம் உண்டு. அவைகளுள் குடிசைத் தொழிலும் ஒன்று. பின் தங்கிய வகுப்பினர்கள் ஓய்வு நேரங்களில் சில குடிசைத் தொழில்களைச் செய்து வருமானத்தைப் பெருக்கிக் கொள்வ

" கலைகளிற் சிறந்த தையற்கலை "
சென்னையிலுள்ள தக்கர் பாபா வித்யாலயம்



தற்காக 1957–58-ம் ஆண்டில் பல மாவட்டங்களில் கீழ்க் கண்ட தொழில்களை ஆரம்பிக்க அரசாங்கம் அனுமதித்துள்ளது :—

1. கண்ணடி வளையல்கள், மணிகள் செய்தல்.
2. தோல் சாமான்கள் செய்தல்.
3. நூல் நூற்றல், நெய்தல்.
4. கைக்குத்தல் அரிசி.
5. கோழி வளர்ப்பு.
6. தையல் வேலை.
7. கொல்லு வேலை.
8. பாய் முடைதல்.
9. செங்கல் செய்தல்.
10. தீக்குச்சித் தொழிற்சாலை.


இந்தத் தொழில்களை நடத்த ஒவ்வொரு ஆண்டும் ரூ. 3·70 லட்சம் செலவிடப்படும். மேற்கொண்டு இந்த ஆண்டில் ரூ. 77,000 செலவில் 10 தொழிற்பயிற்சி நிலையங்கள் துவக்கப் படும். நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் ரூ. 40,000 செல வில் ஒரு பயிற்சி உற்பத்தி இணைப்புத் தொழிற்சாலை ஆரம் பிக்கப்பட்டிருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் கைத்தொழில் நிலையங்களைத் தொடங்க ரூ. 13,000 செலவிடப்படும். பழங் குடிப் பெண்களுக்குத் தையல்வேலை, பூ வேலைப் பயிற்சி யளிக்க 1957–58-ல் ரூ. 44,000 செலவில் 8 பயிற்சி நிலை யங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

**முன்னாள் குற்றபரம்பரையினருக்கான திட்டங்கள்.**—குற்ற வாளிகள் திருந்தி சிறந்த நல்வாழ்வு வாழ்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது முக்கியமான பணி யாகும். அந்த அடிப்படையில் முன்னாள் குற்றபரம்பரை இனத்தவர்களுக்கு தக்க வேலை வாய்ப்புகள் அளிக்க, அந்த இனத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்குக் குடிசைத் தொழிலில்

பயிற்சி அளிக்க—தக்க இடங்களில் பயிற்சி நிலையங்கள் துவக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. 1957–58-ல் எல்லா மாவட்டங்களிலும் ரூ. 21,000 செலவில் தச்சு வேலை, கொல்லு வேலை பயிற்சி நிலையங்கள் துவக்க அநுமதிக்கப்பட்டது. இவைகளில் பயிற்சி பெறுவோருக்கு உபகாரச் சம்பளம் வழங்கப்படும். வட ஆற்காடு, சேலம் மாவட்டங்களில் கூடைமுடையும் தொழிலில் ஈடுபட்டுள்ள குற்ற பரம்பரையினருக்கு ரூ. 12,000 மான்யம் அளிக்கப்படும். மதுரை மாவட்டத்தில் தேனீ வளர்த்தல், கோழிப்பண்ணை போன்ற குடிசைத் தொழில்களில் நாட்டம் செலுத்தப்பட்டுவருகிறது. இதற்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ. 6,000 செலவிடப்படும். நடைமுறை ஆண்டில் ரூ. 4 லட்சம் செலவில் ஒரு தீக்குச்சித் தொழிற்சாலை ஒன்றும், சிமிட்டிக் குழாய்கள், தளங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும் நிறுவப்படும்.

**“ இழைகள் நூற்று நல்லாடை செய்வீரே ”**

சென்னையிலுள்ள தக்கர் பாபா வித்தியாலயம்



**தீண்டாமை ஒழிப்புச் சட்டங்கள்.**—" ஜாதிகள் இல்லை. குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்". உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று மனித இனத்தை வேறுபடுத்தி தீண்டாமையைக் கடைப்பிடிப்பது சட்டவிரோதமான செயலாகும்.

சென்னை மாநிலம் இந்திய அரசியல் சட்டத்தின் முன்னோடியாக 1938-ம் ஆண்டில் சமூகத் தடைகளை நீக்கச் சட்டம் இயற்றியும் (1947-ம் ஆண்டில் திருத்தப்பெற்றது), 1947-ம் ஆண்டில் ஆலய நுழைவுச் சட்டம் இயற்றியும் ஹரிஜனங்களின் தாழ்ந்த நிலையை நீக்கியது.

## தீண்டாமை (குற்றச்) சட்டம் 1955

(மத்திய அரசாங்கச் சட்டம் 22, 1955)

தீண்டாமையைப் போக்குவதற்காக, தீண்டாமையைக் கடைப் பிடிப்பவர்களைத் தண்டிப்பதற்காக 1955-ல் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டது.

**சட்டத்தின் முக்கிய பிரிவுகளாவன :** 1. ஒரே மதத்தைச் சேர்ந்த ஒருவர் ஒரு பொது இடத்தில் வழிபாடு செய்யவோ, அல்லது கடவுளை வணங்கவோ செல்லும் மற்றொருவரை தீண்டாமை காரணமாக தடைசெய்தால் தடைசெய்யும் நபருக்கு 6 மாதத்திற்கு அதிகப்படாத சிறை தண்டனையோ, அல்லது ரூ. 500-க்கு மேற்படாத அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கலாம். இதே முறையில் யாராவது ஒரு கடைக்கோ, அல்லது பொது உணவு விடுதிக்கோ, சிற்றுண்டிச் சாலைக்கோ அல்லது பொது பொழுது போக்கு நிலையங்களுக்கோ தீண்டாமை காரணமாக நுழையக்கூடாது என்று தடுத்தாலும், பொது உணவு விடுதிகள், சிற்றுண்டிசாலைகளில் உள்ள பாத்திரங்களைத் தொடக்கூடாது என்று சொல்லி தடைகள் விதித்தாலும் அவருக்கு மேலே கூறிய விதத்தில் தண்டனை விதிக்கலாம்.

## பொது இடங்களாகக் குறிப்பிடப்படுபவை

1. ஆறு, கால்வாய், ஊற்று, கிணறு, குளம், குடிதண்ணீர்க் குழாய் அல்லது இதர தண்ணீர்க் குழாய்கள், குளிக்குமிடம், சுடுகாடு அல்லது இடுகாடு, சாலை அல்லது நடைபாதை.

2. பொது நிதியிலிருந்து முழு அளவுக்கோ அல்லது ஓரளவுக்கோ நிதி வசதி பெற்று நடத்தப்படும் எந்தப்பொது இடங்களும்.

3. எந்த இடத்திலும் குடியிருப்பதற்காக வீடுகள் கட்டவோ, கைவசம் செய்யவோ, அல்லது குடியேறவோ செய்தல்.

தொழில் செய்யும் நிலையங்கள், வியாபார விற்பனை, அல்லது வேலை பார்க்கும் இடங்கள் ஆகியவற்றில் யாராவது தீண்டாமையை கடைபிடித்தால் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டுள்ள லைசென்ஸை ரத்து செய்ய கோர்ட்டுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

தீண்டாமை காரணமாக வழிபாட்டுக்குரிய இடங்களில் நுழையக் கூடாது என்று அந்நிலையங்களை சேர்ந்த மானேஜரோ அல்லது பொறுப்பாளரோ யாராவது தடுத்தால் அந்நிலையங் களுக்கு அரசாங்க மான்யம் கொடுப்பதை நிறுத்தி வைக்கலாம்.

## 1947-ம் ஆண்டின் சென்னை கோவில் நுழைவுச் சட்டம்

(1949-ம் ஆண்டு 13-வது சட்டத்தினால் திருத்தப்பட்டது)

எல்லா வகுப்பு இந்துக்களும் எல்லா இந்துமத ஆலயங் களிலும் நுழையவும் அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் நீராடவும், தீர்த்தங்களை உபயோகிக்கவும், இந்தச் சட்டம்

உரிமையளிக்கிறது. இந்து மதத்தைச் சார்ந்த ஒருவரை தீண்டாமை காரணமாக ஆலயத்தில் நுழையக்கூடாது என்று மற்றொரு இந்து தடுத்தால் அவருக்கு அது முதல் குற்றமானால் ரூ. 100 வரை அபராதம் விதிக்கலாம். இரண்டாவது அல்லது அதற்கு மேற்பட்ட குற்றங்களுக்கு 6 மாதத்திற்கு அதிகப்படாத சிறைத் தண்டனையோ, அல்லது ரூ. 500 வரை அபராதமோ அல்லது இரண்டும் சேர்ந்தோ விதிக்கப்படும்.

## தீண்டாமை ஒழிப்புத் திட்டங்கள்

தீண்டாமை ஒழிப்புக் கொள்கையை தீவிரமாகப் பரப்புவதற்காக சென்னை மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் நியமிக்கப்பட்ட 3 துணை ஊழியர்களும், 3 உதவியாளர்களும் கிராமங்களில் பொதுக்கூட்டங்கள், நாடகங்கள் மூலமாக தீண்டமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் 1 துணை ஊழியரும், 1 உதவியாளரும் பிரசாரம் செய்துவருகிறார்கள். சுவரொட்டிகள், துண்டு வெளியீடுகள் மூலமாகவும் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்காக ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஆண்டொன்றுக்கு ரூ. 2 லட்சமும் தேவைப்பட்டால் அதற்குமேலும் செலவிடப்படும். 1957–58-ம் ஆண்டு செலவுகளுக்காக ரூ. 2·39 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்பதற்கொப்ப இளம் வயதிலிருந்தே சாதிமத வேறுபாடுகளை நீக்க அரசாங்கம் மாணவர்கள் தங்கும் விடுதிகளில் எல்லா வகுப்பு மாணவர்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று ஆணையிட்டுள்ளது. ஹரிஜன காலனிகள் கட்டும்பொழுது ஹரிஜனங்களுடன் சேர்ந்து வாழ ஒப்புக் கொள்ளும் மற்ற வகுப்பினர்களுக்கு 10 சதவிகிதம் வீடுகள் ஒதுக்கித் தரப்படுவதுடன், ஹரிஜனங்

களுக்குத் தரப்படும் எல்லா வாய்ப்பு வசதிகளும் இவர்களுக்கும் அளிக்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் குடி நீர்க் கிணறுகளைப் பொதுவாக்குதல், உணவு விடுதிகளில் ஹரிஜனங்கள் உண்ண வழி செய்வது, ஹரிஜனங்களுக்கும் மற்றவகுப்பினருக்கும் இடையே கலப்பு மணங்கள் செய்து வைப்பது போன்ற அரும்பணி செய்பவர்களுக்கு இரண்டு முதல் வகுப்புத் தங்கப் பதக்கங்களும், ஆலய நுழைவு, ஹரிஜன காலனிகளில் சமூக வேலை போன்ற திருப்பணி செய்பவர்களுக்கு ஆறு இரண்டாம் வகுப்புத் தங்கப் பதக்கங்களும் வழங்கப்படும். அரசாங்க தஸ்தாவேஜிகளிலும், கடிதப் போக்குவரத்துகளிலும் "சேரி" என்ற சொல் நீக்கப்பட்டு "காலனி" அல்லது "குடியிருப்பு" என்னும் சொல் பயன் படுத்தப்படுகிறது.

**மற்ற பின் தங்கிய வகுப்பினருக்கான நல திட்டங்கள்.**— ஒதுக்கப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் எல்லா கல்விச் சலுகைகளும் பின் தங்கிய வகுப்பினருக்கும் உண்டு. அரசாங்கம் இதில் அணுவளவும் வேற்றுமை பாராட்டுவதில்லை. 1948–49-ல் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ஒரு லட்ச ரூபாய். ஆனால் 1956–57-ல் ரூ. 13 லட்சமாக உயர்ந்துள்ளது. ஹரிஜன மாணவர்களுக்கு அளிக்கப்படும் அனைத்து விடுதி மான்யங்களும் சலவைத் தொழிலாளர், சவரத்தொழிலாளர் மாணவர்கட்கும் அளிக்கப்படுகின்றன.

ஒதுக்கப்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றத்துக்காக அரசாங்கம் வகுத்து நடத்தும் திட்டங்கள் ஒன்றிரண்டல்ல. எண்ணற்றவை. அவையனைத்தும் பலனளிக்கத் தொடங்கி விட்டன. இந்திய மக்கள் "எல்லாம்—எல்லோர்க்கும்" என்ற அடிப்படையில் ஒரு புது சமுதாயத்தை

உருவாக்கி வருகின்றனர். "எனக்கு அடுத்த பிறப்பு இருக்குமானால் ஒரு தமிழனாகப் பிறக்கவே விரும்புகிறேன்" என்று அண்ணல் காந்தியடிகள் கூறுமளவுக்குப் பெருமை பெற்ற தமிழ்க் குலம் இந்த நவ இந்தியாவின் புது சமுதாயத்தை உருவாக்குவதில் நாளுக்கு நாள் முன்னேறி வருகிறது.

GOVT. PRESS, MADRAS.